MADRAS 1929
338



3712
922

K. S. ஸ்ரீனிவாசகசுவாமிகளின்

# திவ்விய சரித்திரம்.

இஃது

மேற்படி சுவாமிகளின் சீஷனான

ஆரூர்பொன்னம் பலபாண்டியனால்

எழுதப்பட்டு

அருப்புக்கோட்டை சொக்கலிங்கபுரம்

க. ஆறுமுகமூப்பனாரவர்களின்

பொருளுதவியின்பேரில்

அருப்புக்கோட்டை

அருப்புக்கோட்டாபிரிண்டிங்பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1929

[அணா 2

Q23:4198w
N29.
180503.

# பரப்பிர்மஸ்துதி.

## கலிவிருத்தம்.

---

காக்குமிருவினைக் காரணமாதிய
வாக்குமம்பீசேழுகிலமதெங்கணு
நீக்குமின்றி நிறைந்தொருநான் மறைப்
பூக்குமெதுவதன் பொன்னடி போற்றுவாம்

தெள்ளிய நன்னூல் தெளிந்த தெளிவினு
ளுள்ளமுமெங்கு முருவிலி தன்மையாய்
விள்ளருஞான விளக்கினை யேற்றிய
கள்ளறு மாசான் கழல் தலை சூடுவாம்.

## அவையடக்கம்

## வெண்பா.

---

ஆரூர்ப் பொன்னம்பலவ னறையுந்த தமிழினைதனில்
நீரறிந்து பானுகரு நல்லனம் போற்-சீரறிந்து
வழுஉக்களைந்து மாமணியின் வகை தெரிப்பார் பாவ
கழல்களென் னெஞ்சிருக்குங்காலே (லர்கள்

---

## வசனம்.

பரமதயா நிதியாகிய சிவபெருமான் கிருபையை முன்னி எனக்குச்சகலகலைகளுமூட்டிய குருநாதனின் சரிதத்தை அல்லும்பகலுமருமறைப்பொருளாய்க்கொண்டாடவேண்டுமெனு மவாவெனைப்பன்முறையுந்தூ

ண்டு கின்றபடியால் ஆசை வெட்கமறியா தென்றபடி பிறர்பழிக்குமென்றவெசகமென்னைவிட்டுமறந்துபோனது மன்றி இலக்கணச் சொற்களறியாத சிறுவனாகிய யானெனது சிற்றறிவுக் கெட்டிய படிஎனது குருநாதன் தனதுதீர்த்தயாத்திரையின் விசேஷங்களைத் தனது கைபட எழுதியிருந்த தக்காப்பியிலுள்ளதைத் தானே கொஞ்சம் கூட்டியுமக்காப்பி எனக்குக் கிடைத்ததின் பின்னுள்ள விஷயங்களைப் பிறராலறிந்ததையும் தொகுத்து எழுதியிருக்கிற இவ்வசனத்திலுள்ள குற்றங்களைந்து குணங்களை யேற்றுப் பித்தனைக்காக்கக்கற்றறிந்த பாவலர்களுடையவும் ஞானநாதர்களான முத்தி முதல்வர்களுடையவும் பொன்னடியை என்னெரமுந் தலைமேற்சூடிய

அடியார்க்கடிமை

**P. பொன்னம்பல பாண்டியன்,**

ஆரூர்.

பூமாதேவியின் வதனம்போன்ற நீர்வளநிலவள மிகுந்த பாண்டி நாட்டில் பழனங்களையே வேலிகளா யுடைய அம்பாசமுத்திரம் தாலுகா கீழக்கடையமெ ன்னுங் கிராமத்தில் க்ஷத்திரியகுல வுத்தமருள் ஓர் எளியகுடும்பத்தைச் சேர்ந்த K. சிவனுபாண்டிய நா டாரையும் கற்பில்மிகுந்த உத்தமியாகிய ஈசுரவடிவம் மாளையும் தந்தைதாயாகக்கொண்டு கொல்லம் 1067-ம் ஸ்ரீ ஐப்பசி மீ 24௳ ஆதித்தவாரமும் திருவோண நட்சத்திர மூங்கன்னியாலக் கினமுங்கூடியசுபவேளை யில் எனது குருசுவாமியானவர் பகவானுடைய திரு வருளால் யாதொரு கெடுதியுமின்றி ஸ்ரீகுமாரஜெனன மாயினார் சுவாமியானவர் தனது தாயின்வயிற்றில் கெற்பமான ஒன்பதாந்திங்களில் பூலாங்காத்தான் சீனிநாடாரென்னு மோர்பெரியோர் தனக்குப் புத்திரப் பேறில்லாத வெறுமையால் தனது ஆஸ்திகளையெல் லாம் நன்கொடையாக எழுதிக் கொடுத்திருக்கிற எனது குருசுவாமியின் அன்னையாகிய ஈசுரவடிவம் மாளை நோக்கி அம்மா நினது உதரத்தில் தங்குங் குழந்தை ஈஸ்பர அம்ஸமுள்ள ஆண் குழந்தை யாகு மதற்கு எனது நாமகரணஞ் சூட்டி எனது ஆஸ்தியை காப்பாற்றி அவனுக்குக் கொடுப்பாயெனக் கட்டளை யிட்டுக் காசியாத்திரையாகச் சென்றனர். அப்பால் எனது குருசுவாமி யானவரின் முதிர்ந்து தனது தாயி னது குட்சையைவிட்டு சுகப்பிரசவமாகப் பிறந்த காலத்தில் மேற்சொல்லிய பெரியோரின் வாக்குப்படி குழந்தைக்குச் சீனியென நாமஞ் சூட்டியருமையுடன் பாராட்டி வயது வளர வளர நற்குண நற்செயல்கள் வளர்ந்திடினுஞ் செல்வப் பேற்றின் குறைவதனால்வறு மையுடன் வழக்கப்பட்டனர் இந்த நிலைமையில் எனது குருசுவாமி பிறந்த ஆறுவயதுகளில் அவ்வூரிலுள்ள C. M. S. ஸ்கூல் ஹெட்மாஸ்டரான தேவவரம் உபாத்தியாயரைக் குருவாகக் கொண்டு கல்வியயின்று சுமார் தனக்குப் பன்னிரெண்டு வயதுக்குள் நான்சாம்

வகுப்பென்ற பிரைமெரிபரீட்சையில்தேறி ஒழுக்கம் தயை, ஈவு, இரக்கம் என்பதையே தனக்குச் சகோதரமாகக் கொண்டு பங்களோசுரண்டை போர்டிங் ஸ்கூலில் 5-ம்வகுப்பினில் சேர்ந்துகல்வியயின்றுவருங் காலத்தில் ஒன்பது திங்களின்மேல் அதற்குரிய பீஸ் கொடுக்க சக்தியில்லா தவறுமையென்னுமகாபுருடன் யுத்தம்புரிந்த தன்மையினாலும், தன்னுடைய திரேக அசௌகரியத்தாலும், ஸ்கூலைவிட்டு தன்னைப்பயின்ற நன்னகர்புக்கி மறைவழியடுத்துத் துன்மதிகெடுத்துச் சுகவழிநாடித் தன்னுயிரோக்க மன்னுயிரைத் தேடிக் கொல்லாவிரதத்திற்கூடிப் பகவானது திருவடியிலே தனது ஜீவியத்தை யொப்புக்கொடுத்துக் கொண்டுவருங் காலத்தில் தன்னைப் பெற்றுரறியாமலே விஷ்ணுவாலயஞ் சிவாலய முதலிய ஆலயங்கள் செல்வதும், அல்லும் பகலும் ஆலயத்திருப்பணியே செய்வதுமாக ஈஸ்வர பக்தியே முதிர்ந்தவராய்ப் பகவானுக்கு ஈடுபட்டுவருங் காலத்தில் சிவ பக்தியானது வளரவளரத் தன்னிலமையின் தன்மை இன்னிலைதானென்பது தனக்கே தெரியாதவராய்த் தான்பிறந்த பதினைலா மாண்டிலே உரு வெளித் தோற்றத்தில் தனக்குமுன் தனித்தொருவர் நிற்பது போலவும். இதைக் கண்ணுறும் பிறர் மனதுக்குப் பித்த பயித்திய மென்றுணருமாப்போலான எங் குருசுவாமியார் தனதுகிரகத்தையுந் தந்தைதாயுற்றார் முதலானவர்களையு மறந்தவராய் ஆலயத்தையே தனக்கு வீடாகக்கொண்டு அன்ன மருந்துவதை மருந்தாகப் பாவித்து அறுசுவையைத் திருவருளின் பரசைவ வெளியிலானார். ஆராயினு மன்ன மருந்துவதாய் வற்புறுத்துவாருகிலவரிடம் அரிசிதரப்பெற்று பனையோலையினுதரவிலதைச் சமைத்துண்டு வவனுடனுடுவதே என் குருசுவாமியின் கொள்கையா யிருந்ததுந் தவிற யார்யார் தனதுள்ளத்தி லிலதைக் கருதினார்களோ அதைஎளிதிற் கண்டறியக்கூடிய சக்தியு

மப்போதே கிடைத்திருந்ததாகச் சுவாமி தனது
ஜீவியத்திலடைந்த இன்ப துன்பங்களை எழுதப்பட்
டிருக்கிற ஆதாரத்தால் வெளிப்படுகிறது. இந்த
நிலைமையில் அந்தகனனையசுவாமியின் தந்தையானவர்
தனது புத்திரனுடைய செய்கையைநோக்கித் தனக்
குள் தானே ஆலோசனை செய்கின்றார், எப்படி
யெனில் நாம் வறுமையெனும் நோயில் மூழ்கினுந்
தன்னிலைமை யிவ்விதமெனப் பிறரறிவதற் கருமை
யாகத்தன் ஜீவியத்தைத் தள்ளிவந்தும் தனக்கு
ஒரேபேறான இப்புத்திரன் பண்டாரவேடங்கொண்டு
பலரிடமுமிரந்து வயிறு வளர்க்கின்றதைப்பார்த்தால்
ஒருமகனைக் காக்குந்திறன் தந்தைக்கிலாத வறுமை
யால் பிள்ளையிரக்கத் துணிந்ததெனநம்மையுலகோர்
நகைப்பார்களெனும் வைராக்கியத்தால் இன்னல்
பல வியற்றுவதா லஞ்சி யடங்கி லாதரிப்போம்.
அன்றேலாரு மறிவுறா வண்ணம் மற்கக ஊருக்
கனுப்பிவிடுவதே நலமெனத் தீர்மானங் கொண்டவ
ராய்க் கோபாவேசத்துடன் கூர்மையான கொடு
வாளுடன் தனைகளுக்கொண்டு வருவதைக் கண்ட
கண்ணனருள்பெற்ற வுத்தமகுண வண்ணலாகிய
கருத்தான் சேர்வை யென்ற வோர் பெரியோரால்
காக்கப்பட்டுத் தனது தந்தையறிவுறாவண்ணமெனது
குருசுவாமியைக் கொடிமாடன் பிச்சாண்டி நாடார்
வீட்டின் மேன்மாடியில் ஸ்டாம்புவெண்டர் S.
இராமசாமி நாடாரின் ஆதரவின் பேரிலிருந்துவரும்
நாளில் எவ்வாறோ எனதுகுருநாதனின் தந்தைக்குத்
தெரியப்பட்டு எமபாதக ரூபத்துடன் சண்டோர்
நடுங்குமாயுதபாணி களேர்திச் சுவாமி யிருக்குங்
கிரஹத்தைச் சுற்றிக்கொள்ளப் பகவானது திருவு
ளச் செயலாலாருமறியா வண்ணந் தானிருந்த பதி
கடந்து ஆறுக்குமேல்பாலுள்ள பண்ணைகளூடு விள
ங்காநின்ற ஜெகஜ்ஜோதி மயமான கல்யாணியம்மன்
ஆலயத்திற்கு மேல்பாலான சுனைக்கரைப்பாறை

யெனப்பெயர் வாய்ந்த சிறுகுன்றிலுள்ள குகையில் ஆருமறியாவண்ண மிருபத்தைந்து தினங்களாக வதில்வசித்து வருநாளிலோர்நாள் அதாவது 1084ம் ஞ ஆனிமீ 22உ பகல் பத்துமணி சுமாருக்கு நடந்த விசேஷத்தைப் பலமக்களைப்பயந்த தாய்மார்களே சற்று விநவாகக் கேளுங்கள் கற்குகையுள் நற்பொழுதை யோட்டிவரும் விற்பன சிரோன்மணி யினிருப்பிடத்தை நிரைகாக்குஞ் சிறுவர்களாலறிந்த சுவாமியின் தலைதக்கூர்மை பொருந்திய கொடுவாளென்னு மெமபாசங்கைக்கொண்டு குகையை நாடி யாவருமறிவுறாமல் சுவாமியின் பின்வசமாய்ச் சந்தடியன்றிச் சென்றுக் கற்குகையின் முன்னின்ற நிம்ப மரத்தடியிலிருந்த சுவாமியினகத்தைக்கைப்பற்றிச் சிரத்தை வளைத்து ஓங்கி வெட்ட வாரம்பித்தனர், அதைக்கண்ட சுவாமி என்னசெய்வார் அந்தோ ஆலவாய்க்கன்னல்போலு மாவின் முன்தேனை போலு மகப்பட்டு விழிக்கிறார் பஞ்சபூதமடங்குகிறது அறிவு கலங்குகிறது நெஞ்சு பதறுகிறது நாவு குழறுகிறது செந்தாமரைக்கமலம் போன்ற இரு கண்களினின்று கங்கையானவள் தாண்டவமாடுகிறாள் சுவாமியானவர் எழுதியிருக்குங் காப்பியத்தைக் கண்ணுறுமெனக்கே மெய்மறந்து கண்ணீர் ததும்புமானுவிக்கோலத்தை அனுபவிக்கும் வேளையிலெனதாசானிலுள்ள மெவ்விதமாகப்பாதகித்திருக்குமென்பதை பலமக்களைப்பெற்ற வுத்தம தாய் தந்தையர்களே யோசியுங்கள் எனதாசானோ ஒருவாறு வுள்ளமானது நிலைதளர்ந்த போதிலுமொருவாறு திடங்கொண்டவராய் சுத்தசைதன்யக் கருணாகரப் பெருமானின் செயலை நினைத்துப் புகழ்ந்து வருவாயெடுத்த நாளே மறலி வாய்ப்படுவதொரு நாளென்னு மன்னுளின்னுளா மெனத்திடங்கொண்டு தனது தந்தையினடிகளைச் சிரமேற்சூடி யிருகைகூப்பித் திருவாய் மெள்ளத்திறக்கலாயினர்.

### வெண்பா.

ஈரைந்து திங்கள் சுமந்தெனையீன்ற வெந்தாயின்
ஞேரைந்து மஞ்சி னெஞ்சமுக்கிறதே—நீரேந்து
பூபாரந் தீர்ந்தனவோ புத்திரனை யீன்றெடுத்த
மாபாரந் தீர்ந்தனவோ வரை.

எனப்பாடிக்கொண்டு மெந்தாய் பின் முன்னறியாத பிள்ளைப்பருவத்திலும் அன்னியநகரின் தன்மையின்னதென வகை தெரிப்பதற்கிடமிலாது நட்டாற்றுக்கோரை யெனத்தயங்கு மடியேனை யிவ்வேளைமட்டும் பாதுகாப்பீர்களானால் கற்பகோடிக்காலம் சிற்பனமாய் வாழ்வீர்களையா பன்னூல்களின் பயனறிந்த மெய்யா ஐயமலர்க்கையா என் னெஞ்சந் துடிக்கின்றதே வெய்யாய்க் கற்போன்ற வுன்னெஞ்சத்தில் சற்றிரக்கம் வைத்தொரு மனுவிற் குன்னருள் செய்யாய் எனையாளையா இதுகாறும் நான்செய்த குற்றங்களை மன்னித்து இது வேளைக்காப்பீர்களாகில் தங்கள் புலன்களுக் கெட்டாதமதுநகர் சென்று நிரைகாத்தாவாது உயிரை வளர்த்து கொள்வேனையனே அன்றேலெனைக் கொல்வதானுஞ் சுமையிரங்கியதா இகபரசாதனங்களுக்கு ஈடாகிய பரவாழ்வின்சைதன்யத்தைப் பெறுவதற்குரிய சாதனங்களுள்ள தெல்லாமவலமாய்ப் போதலாமா அவ்வுலக சுமையைத் தாங்கலாமா ஆகையாலெந்தாய் நின் கருணை நிறைந்த கடைக்கண்ணருளால் காப்பாயென்று கண்களில் நீருருகக்கதறுகின்றதைக் கண்ட தந்தையானவர் கர்னகடூரமான மொழியுடன் அடே பண்டாரப்பயலே இன்று தினகரனேகுமுன்பானுன் மகன் சிரசைக்கொண்டுவந்து வுனக்குக்காட்டுகிறேனெனப் பிரதிக்கினை செய்து வந்திருக்கிற தன்மையினுனது தாயாரெனத்தேடி வழிபார்த்து வாடி நிற்பாள் ஆகையால் வெட்டுகிறேன் உனக்கு ஆதவான தெய்வங்காக்கட்டுமென்று சற்றேனுமிரக்கமில்லாக் கன்னெஞ்சனை தந்தை தனது புத்திரனை

வெட்டக்கரத்தை யோங்குங்காலத்தில் திங்களரவணி சிவபிரானருளால் எனது குருசுவாமியின் ஜெனன நகருக்கு வடபாலுள்ள ஓர் சிற்றூரான நரையப்பபுர வாசிகளான இரண்டு ஸ்திரீகளின் ரூபமாய்க்கது மெனத்தோன்றி யிருவர்க்கும் நடுவினின்றுகொண்டு ஹே, தீதா எழின்மறை வரம்புகடந்து இதோ நிற்கு மிப்புத்திரன் மீது நின்கையைப் போடாதே என்று தடுத்துச் சுவாமியினளகத்தை மெள்ள விடுவிக்கத் தடேலென்று மறுபடியும் பிடிக்கச்சுவாமி தனது மேலணிந்திருந்த் சுமார் மூன்றுமுழ நீழமுள்ள அங்கவஸ்திரமட்டுங் கிடைக்கப்பெற்றானன்றி எனது குருநாதனைக் காணாமல் திகைத்தார் சுவாமியோ இடையிற் கட்டியிருந்த கந்தைத்துணி யொன்றுடன் தன்னை வெட்டவந்தக் குன்றின் வடபால் ஓர் பெருந் தும்பைப் புதரடியில் குந்திக்கொண்டு தனது தந்தையைப் பார்த்தவண்ணமாகவேயிருந்தார். தாம் எண்ணிய காரியம் முடியாத தன்மையினாலும், பானு மறைபுமுன் னிந்த மலைச்சாரல்களினைக் தேடுவோ மென்னுங் காதலுடனுந்தம் முன்னிற்குமம் மாதர்களுடன் ஏதேனும் வாய் திறவாது எமனும் பின்னிடையத்தக்க வீராவேசத்துடன் அம்மலைச் சார்பெல்லாஞ் சென்று தேடியுந் தனது புத்திரனைக்காணாத தந்தையுள்ளம் நொந்து கிரஹஞ்சென்றார். மலைச்சார்பெல்லாந்தேடிய தனது தந்தைவீடு சென்றதுவைப் பார்த்துக்கொண்டே யிருந்த சுவாமியானவர் தன்னை வெட்டவந்த குன்றின் வடபாலுள்ளச் செண்டாக் கட்டி யென நாமம் படைத்தக் குன்றினுச்சியில் ஓர் குகையைத்தேடி அதையே தனக்கு வீடாகக் கொண்டு தனக்கு பாட்டனான சுப்பிரமணிய நாடாரென்பவரால் தினந்தினமாலையி லொருவேளைக்கால் படிக்குக் குறையாத பதனீர் கொண்டுவந்து தரப் பெற்று இருபத்தெட்டு தினமவ்விடத்தி லீஸ்பாதியானஞ் செய்துகொண்டிருக்கும் காலில் எவ்வித

மாகவே தனது தாயுடன் பிறந்த மாதுலனை சடலைமாட நாடாருக்குத் தெரியப்பட்டுக் கட்டுச் சாத மெட்டுகளுடன் மலைவந்து சுவாமியைத்தேடிக் கண்டு கொண்டு தனது கிரஹத்துக்கு வரும்படி பலாத்காரஞ் செய்வதைக்கண்ட சுவாமி பதிலாக மாமா சிலநாளைக்கு முன்பாக விரும்புதற்கு வரும் பொருளான எனக்குக்கிடைத்த நாகரத்தினத்தை இம்மலைக்கப்பால் பதனஞ்செய்திருக்கிறேன் அதை யெடுத்துவருமட்டுந் தாங்களிவ்விட மிருங்களெனப் புகல்சொல்லி மாதுலனை விட்டு மறைந்து சுமார் நாலு மைலுக்கு மேல்பாலுள்ள கரடி புலி முதலிய துஷ்டமிருக சஞ்சாரமாயும் பப்புகளொருங்கிய தருக்கள் சூழ்ந்ததாயுமான கொடிய வனத்தினூடு புகுந்து காய்கனிகந்தமூலங்களையே தனக்கு ஆகாரமாகக் கொண்டு மூன்று திங்களவ் வனவாசஞ்செய்து வருமத்தியில் வனத்தில் வசிக்கும் சுவாமியின் விஷயந் தெரிந்தோ அல்லது வழக்கப்படி தானே வன வேட்டையில் தீரனான தனது தந்தை வேட்டையாடும் பாவனையாகச் சிலகுக்கல்களுடன் வனமுழுவதுந்தேடி வருவதைக்கண்ட சுவாமியானவர் மறலியாகிய தந்தை தன் கண்ணுறுவரேல் அன்றே நங்கடை நாளடுத்த தெனத் திட்டமாயெண்ணியவராதலால் தந்தை தன்கண் புலனுக்கெட்டாமல் விண்ணிலெழு மின்னனையத் தன்வனத்தைக்கடந்துடனே பண்ணை சூழுங்கண்ணியமான மன்னர் வாழும் நன்நகரான குருமணிகளாலிழைத்த மாட மாளிகை கூட கோபுரமிலங்குந் திருநெல்வேலி வந்து ஸ்ரீ நெல்லையப்ப சுவாமி ஆலயஞ்சென்று சுவாமி பாதஞ் சிரமேற்கொண்டு பாடியகவி.

கல்லை மணலையன்று காய்ச்சியுணத் தான்விதிக்கா
நெல்லையப்பன் றன்னடன நேர்மையதைச் சொல்லிடவர்
தாங்கவரு மந்தகனூர் தந்தையிடங் காப்பதற்கு
மூங்கில்தனி லேபிறந்தான் முன்:

எனப்பாடிச் சுவாமியி னருட்பிரசாதம் பெற்றுக் கொண்டு மறுதினம் ரெயில் மார்க்கமாய் மதுரை வந்து மீனாட்சியம்மன் சொக்கநாதர் சன்னதி கண்டு ஆனந்தங்கொண்டு பாடியகவி.

பட்டபல பாடுடைய பாவிநெஞ்சே யிம்மயக்காற்
கெட்டவெனைக் காக்குமருட் கேண்மையினால் விட்டவிதி
யெக்கால மொன்றாகி யெனதுளத்தி லாடுகின்ற
சொக்கால முண்டவருட் சொக்கா.
பெற்றோர்க ளுற்றவிதிப் பேசுந்திற னிங்கிருக்கச்
சுற்றாத வின்னலெனுஞ் சூழ்ச்சியது கற்றதிடந்
தானாட்சி யென்றதன்மை தந்தையுடன் போனதுவால்
மீனாட்சி யுன்பாத மீதி.

என இவ்வாறுபாடி ஆனந்தங் கொண்டாடி அறுசமையம் நாடி அதன்வழியிற்கூடி ஆண்டவனி னருள் கிடைக்கப்பெற்று ஆறு தினந்தங்கி யப்பால் திண்டுக்கல் மார்க்கமாய் திருச்சிராப்பள்ளி சென்று அம்மாநகரின் மத்தியிலுள்ள ஓர் சிறு குன்றின் மீதுள்ள உச்சிப்பிள்ளையார் கோவிற்சென்று தெரிசனங்கொண்டு இருகரைகளிலும் வளைகளீன்ற தெள்ளிய முத்தங்களை தனது அலைகளெனுங் கரத்தாற் கொழிக்கும் நளம்பொருந்திய ஸ்படிகம் போன்ற நீரையுடைய காவேரியாற்றின் பெருமையையும் நோக்கியதினி ஸ்நான ஜெபதவங்களை நிறைவேற்றிக் கொண்டு அவ்வாற்றிற்கு வப்பாலுள்ள ஸ்ரீரெங்கம் சென்று ரெங்கநாயகன் பதுமமலர்களில் வீழ்ந்து பணிந்து பாடியகவி

அந்தரங்க மூர்த்தமறை யாதிமுத லாகுசிர்
வந்தரங்க வாசாவினை வாட்டுமே குந்தியுரி
வெண்ணெயுண்டு மாமருத மிடைதவழ்ந்த மாயவண்ணக்
கண்ணனென துளமன்னுங் காலே.

எனப்பாடி ரெங்கநாயகனது திருக்கருணை தரப் பெற்றுத் திருவானைக்கா வந்து தெய்வநாயகன் மல ரடி யேற்றி பாடியகவி

சூழ்வினையின் பாசம்படற் றெண்ணீரது வெண்ணீராக
வூழ்வினையின் மாசறுத்து வூட்டுமே—தாழ்திறந்து
ஒருமானை வாமங்கொண்ட வருவானே யோங்குகைலைத்
திருவானைக் காபதியிற் சேர.

எனப்பாடி ஈஸ்பர கடாட்சம் பெற்றுக் கும்பகோணம் மாயவரம் மபார்க்கமாய்த் திருக்கடையூர் புக்கி மார்க்கண்டேயனுக்காக மறலியையுதைத்த மலரடி கண்டு சேவைகொண்டு பாடியகவி.

கடைதனிற் கொடிய காலனார்பாசக் கயிறெடுத்
தறுகுறுங் காலைப்
படைமதன் கணையாற் பரிந்தெனைச்சூழ்ந்து பற்றினா
னிமிசமு மறலே
னுடையுரித் தோலு முருமழுமானு மூடம்பெலாம்
பறந்தவெண் ணீறும்
விடைதனித் திங்கள் மேலேழுகங்கை விளங்கிய
வாமமா னானையும்

என்றுபாடி யான்பாதமேத்தி மற்றுநாளினில் சீர்காழி சென்று சட்டையப்பநாதன் சேவை கொண்டு அவண் பதினைந்துதினமிருந்ததாகத் தெரிகிறது எனெனில் அவ்வாலயத்தின் வடபாலான யிருநிதியுந் திறமெய்திய கப்பற் செட்டியார் தான் வஸ்திரதானஞ் செய்யப் போகிறதாகக் கேள்விப் பட்ட எனது குருநாதன் தனது தந்தையிடம் பறி கொடுத்துவிட்டு வுடை வேஷ்டி யொன்றுடனலை கிறதினாலிவண் வஸ்திரதான நாளை யெதிர் நோக்கிக் கொண்டிருந்ததாகக் கருதுகிறேன் அந்தநாளிற் சுவாமியின் திரேகமீது இடைவிடா நமைச்சிரங்கின் துன்பமதைச் சகிக்க வாற்றாராய் சட்டையப்பநாதர் மீது பாடிய கவி.

அட்டை யரணைமலி யந்தகனா ரானையத்
தொட்டகமைச் சிரங்கின் றொந்தரவைச்—சட்டையப்பா
அடியவனுக் குன்னருளி னாற்றலினா லாற்றிவிடு
வடியமுனை மெனதருகு வந்து.

எனப்பாடிச் சுப்பிரத்திரேகம் பெற்றுச்சுவாமி யினருளைக்கொண்டாடி வஸ்திர தானமும் பெற்றுக் கொண்டு தெள்ளியவறலையும் நவரத்தினங்களையு மிருகரைகளிலுங் கொழிக்கப்பட்டக் கொள்ளிட மென்னும் நதியைக்கடந்து சிதம்பரஞ்சென்று நடேசப் பெருமானைத் தெரிசித்துப்பாடிய கவி.

தேமென் கனிசுவையாற் றிகட்டுகின்ற மானனையார்
காமன்கணை யுள்ளுருவிக் கான்றுகுதே—மாமறையின்
ஈந்தனுக்கு வீடளித்த நாயகமே யீடழிந்த
வெந்தனுக்கு வவ்வரநீ யீ.

எனப்பாடி சுஸ்பசகடாட்சம்பெற் றப்பால் விழுப்புரம் வழியாக அருணசலம் சென்று அக்னி மலையை வலமாய்வந்து அருணேசர் தெரிசனம் பெற்று பாடிய கவி.

தங்கமழு மருணகிரி மலைவலமாய்ச் சேவித்தோர்
தீப மிட்டோ
மங்காத பெருவாழ்வி னிருநிதியின் றிறமெய்தி
வான நாட
ரங்காளுஞ் சிவிகைவர வதன்மீது கைலேசக
ரனுகு வாரேல்
தங்காய மூடாடு முனைத்தேடி நிதம்வாடுந்
தமியேனை யாண்டிடாயோ.

எனப்பாடியவணிரண்டு நாள்தங்கி புண்ணி யப்புனல்களாடி யப்பால் திண்டிவனம் மார்க்கமாய்ச் செங்கற்பட்டிலிருந்து சுமார் ஒன்பது மைல் தூர முள்ளத் திருக்கழுக்குன்றஞ் சென்று சுவாமியின் தெரிசனஞ்செய்து பாடிய கவி.

உருக்கழுவாய் வாடிநித மூடுநவி வாடுகிறேன்
திருக்கழுக்குன் றீசர்பதந் தேடியே—யிருக்குமுத
ஞமறையுந் தேடுமுரு காணகட மானதுலைக்
காமனறவின் னோரங் காட்டு.

எனப்பாடிச் சுவாமியின் திருவருட் பெற்றுச் செங்கற்பட்டு மார்க்கமாய்த் திருக்காஞ்சிபுர மேகிச் சிவபிரானின் ஆலயங்கண்டுசேவைசெய்து பாடியகவி

அகம் பலபலவா யாடுவத னுட்டம்விட்டு
யேகம்பா நின்னருளா லின்னலறத்—தாகம்பார்
உனைக்கூடி நானுட னாடாடு மென்மதியின்
தனைக்கூட்டி யாடுவதுந்தா னூர்

எனப்பாடி யருள்வரம் பெற்றுச் சித்தூர் மார்க்கமாய்த் திருப்பதி சென்று திருவெங்கடேசப் பெருமான் திருப்பதமேற்றிப் பாடியகவி.

ஆடிவரத் தேடியரு ணீதன்மலை யேழுதலை
யங்கவழி தங்கிச் சென்று
அண்டவழி கண்டபல யோனிவழி மீதுலகி
லரியமறை காய மாகக்
கூடிவரு தாயிரு பாகமது வாகவருள்
கொண்டநிலை கண்ட மாயக்
கூற்றினுரு வாற்றல்வழி மாற்றியடி யேனைவிழி
கொண்டுகடை கண்டு காத்து
தேடிவரு மாயவலை யாடியுருக் காட்டிமயல்
தேக்குமன வீக்கு மாதர்
தீயகுழி நாறுபுனற் கேணியதி லாழ்ந்துநிதஞ்
சேருமத னீறு மாகா
வீடுயா காடும்வர னீதருவா யாதரவாய்
வேயிசையின் வாயா மாயா
வேதமுத லாடுமய னுருலகி லேழுமலை
மீதுவள ராதிமய மே.

எனப்பாடித் தண்டாமலரடியில் வீழ்ந்து அண்டர் நாயக னதருளைப்பெற்று அம்மலைகளின் விசேடங்களை யெல்லாங்கண்டு ஆறுநாளம்மலைவிட்டு ரேணு குண்டாமார்கமாய் ரேச்சூர் ஜோலாப்பூர் டேரண் பூனாவழியாகக் கல்யாணி யென்னும் ஜங்ஷன் கடந்து மஞ்சு தவழும் மலைகள்சூழ்ந்தப் பஞ்சவடி யென்னும் புண்ணியபதி சென்று ஸ்ரீராமலக்ஷ்மணனின் கல்வெட்டு சிலாசனங்களின் திருநடன சேவை செய்து இருபத்தேழு தீர்த்தமும் மூழ்கியவ்வனத்தின் அழகைக் கவனித்து மரன் கிருபையின் விசேடத்தையும் நினைத்துப்பாடியகவி.

அஞ்சுமற வஞ்சரக்க ரஞ்சுமறு ளாதரவின்
நஞ்சுமறக் கற்கவித்த நாயகமே—விஞ்சையுடன்
நெஞ்சுதனில் வேண்டுகின்றே னீயருகி னின்றிடுவாய்ப்
பஞ்சவம யானதிருப் பதியில்,

எனப்பாடி ஸ்ரீருமபதஞ் சிரமேற்சூடி பிரேகாவென்
னுந் தீர்த்தஸ்தலஞ் சென்றதும் பாடியகலி.

தண்ணியல் கருணை வெள்ளச் சாஸ்பதி
யமுனை கங்காப்
புண்ணிய நதியைக் கண்டேன் புன்குழி
பிறப்பு மற்றேன்
பண்ணிய பவங்க ணீக்கிப் பழவினை
யறுத்துத் தூய்மைக்
கண்ணிய மனத்தும் பெற்றேன் கருணைமா
நதிகண் டாலே.

என்முனோர் காசி யேக வீன்றுதிர்
பருவங் கண்டு
முன்மறை யறைந்த னீதி முடிவுரு
தவனி ஞம
மென்மனஞ் சுமந்த வாற்ற லித்தலங்
காணப் பெற்றேன்
கன்மன மழிந்து ஞான கங்கையு
மூழ்கப் பெற்றேன்.

எனுஞ் சிலவரிய பாடல்களைப்பாடி யந்தண தர்ப்பணத்துடன் தீர்த்த ஸ்நானஞ்செய்து மூன்று தினமவணுற்றமோ ருணைந்த சுவாமிகளால்சிலவரிய உபதேசங்கள் கிடைக்கப்பெற்று சுமார் பத்துமாசமட்டுமம்மா முனியினுசிரமந்தங்கி யவர்களுக்குச் சிஷ்ருசைசெய்து வழிபட்டுவருநாளில் யாவருக்குங் கிடைப்பதற்கு வருமையான உபதேசங் கிடைக்கப் பெற்று அன்னவர் விடையுடன் காசிமாககரை நோக்கிக் கால்நடையாய்ப் பிரயாணஞ் செய்த வழியினிடையிற் தாங்கற் கரிய துன்பங்கள் நேரிட்டதாக எனது குருசுவாமியால் கிடைக்கப்பெற்ற புத்தகத்திற் கண்டிருக்கிறதேயன்றி யதன்விபரமின்னதென வெழுதாததினல் நானும்எழுதத் துணியவில்லை இந்த

நிலைமையில் நான்கு நாளிற் காசிமாநகர் சென்று அரிச்சந்திரக் கட்ட முதலறுபத்திநாலு மாடி யன்னகர் வலம்வந்து விஸ்வநாதர் ஆலயஞ்சென்று மலரடி வணங்கிப்பாடியகவி.

கட்டமறு பத்தி நாலுங் கண்டதிலிஸ்
நான மன்னச்
செட்டிகள் குமார சாமி தேசிகர்
மடமுங் கண்டேன்
மட்டிலா வெள்ளி தீர்த்த வாசலும்
விஸ்வ நாதர்
எட்டிய சுயமா லிங்க விருடிகள்
தோற்றங் கண்டேன்.
கண்டதும் பவங்கள் தீர்ந்தென் கன்மமும்
விலகி ஞான
துண்டமு மோன வீதித் துணுக்கமு
மாதியென்னுந்
தண்டமுஞ் சோதி வீட்டின் தத்துவக்
கடலி லாழ்ந்து
வண்டமு மணுவாயக் கண்டே னதியைக்
கண்டப் போழ்தே.

என்னு மநேககவிதமான ஞான மதுரங்களை யூட்டிய காசி விஸ்வேசர் அருட்பாவென்னும் பெயருடன் அருமையான பதங்களைப்பாடிப் பரவசங் கொண்டாடி யிருக்கின்றனர் அவைகளை யெல்லா மெழுதவிச் சிறுநூலிடங் தராததாலதனைத் தனியாக வெளியிட யோசிக்கப் பட்டிருகிறது இவ்விதமாக எனக்கு வரும் பொருளூட்டிய குருசுவாமியார் எட்டுநாள் வரை யக்காசிமா நகரிலிருந்து விட்டேப்பின்னர் ரெயில்மார்க்கமாக சுமார் 432 மைல் தூரமுள்ள கல்க்கத்தா வென்னுங் கடிநகர் சென்று டிராம்கார் மூலமாய் ஒவ்வொரு வீதிகளையுங் கண்ணுற்று சுமார் ஆறுமைல் தூரமுள்ள காளிக்காடென்னும் ஸ்தலம்புக்கி ஆளிமீதேறிய காளிமாதேவியின் கழல்களைப்பணிந்து அவ்வாலய வீதியிலுட்

கார்த்திருக்கும்போது திடீரென நமது சுவாமிக்குக் கடினமான சுரம் ஏற்பட்ட துன்பத்தால் பாடியகவி.

எங்குலமா நாயகியே யீஸ்பரியே யுன்னருளால்
தங்குலத்தை விட்டொழித்தேன் தத்துவமே—பங்கம் வந்தால்
வழிவழியி னன்னையுன்னை யல்லாமல் மாநிலத்தில்
பழிப்பதையார் சற்று பகர்.

என்று பாடியமாத்திரத்தில் சுகதிரேகம்பெற்று அவ்வாலயத்தில் பக்கமாய்க் கட்டப்பட்டிருக்கும் மைசூர் மகாராஜா சத்திரத்தில் கண்தூங்கு மத்தியில் ஓர் பெண்வந்து காசிமாநகர் அழிகிற தென்று சொல்லி மறைந்ததாய்க் கனவுகண்டு விழித்ததாகவும் அதுபோல் காசிமாநகர் கங்கை பொங்கி சுமார் 1080 வீடுகளழிந்து விட்டதெனக் கேள்விப்பட்டதாகவும் எழுதப்பட்டிருக்கின்றன அப்பாலெனது குருசுவாமி கல்க்கத்தா வென்னுங் கடிநகர் விடுத்துத் தென்திசை நோக்கி ஜட்னிபென்னும் ஜங்ஷனிலிருந்து சுமார் 40-மைல் தூரமுள்ள ஜெகநாதமென்னும ஸ்தலம் சென்று வாரி தீர்த்தமாடி ஜெகநாத சுவாமியின் பாதாரவிந்தத்தைத்தேடி சிரமேற் சூடிப் பாடியகவி.

அகப்பற்றி னுள்ளுறவி னுதாரந் தானறுத்து
ஜெகப்பற்றை நீக்கிவிடும் ஜெகநாதா—பகைப்பற்றின்
வானுக நீயிருக்கும் வகையறிந்து தானடர்ந்தால்
தானுகத் திறக்குமத் தாழ்.

எனப்பாடி ஜெகனாத சுவாமியின் திருவருட் கடாட்ச ம்பெற்றுத் திரும்புங்காலையில் ஓர்வயோதிகப் பருவமுள்ள பெரியோ ரொன்றியாய்த்தன் நாமஞ் சொல்லி யழைப்பதுவைக்கேட்ட எனது குருசுவாமியார் திகைத்துத் திரும்பி நாலு திசையும நோக்க வடதிசையினின்று அழகிய வோர்வயோதிக புருடன் தண்டிக மண்டலாதிகளுடன் தன்னை நோக்கி வருவதைக்கண்ட சுவாமியு மெதிராக ஓடிப்

பொற்கமலம் போன்ற பாதார விந்தங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து ஒருபாலொடுங்கி நிற்க அக்குருசுவாமியவர்கள் தனக்குச் சகல வித்தையின் மர்மமும் இரேகையின் கர்மமும் அதர்வண தர்மமும் நுண்ணூற் பயிற்சியுந் தெளிவு படக்காட்டி ஞானஜலத்தில் கரைத்துடற் கூட்டி சில புத்திகளுங் கற்பிக்கின்றார் எப்படி யென்றால்

கவி

என்மனதிலையந்தசீடா யிகபரசாதனங்கள்
கன்மத்தாலடைவதன்றி கருமத்தாலடையமாட்டார்
நன்னகர்தன்னிற்புக்கி சங்கையையவதுவைசெய்து
கன்மத்தினூற்றல்நீங்கக் கான்முளையொன்றுபெற்று

அத்தமுமணுவுமாகி யறுமறையிறுதியாதி
முத்தனாய்நின்றஞான மோனத்தின்வெளியைக்கண்டு
சித்தனாயுலகோடொத்துச் செய்வதனுசெய்தியென்று
கத்தனைப்நிறைந்தயோகக் கடவுள்தான்கழறுங்காலை.

திட்டியஞானமோன தேசிகாசிறந்தநன்னூ
லூட்டியவெந்தாய்மாய வுலகமீதெவையுற்றாலும்
வேட்டலின்குழியில்வீழா தெனையுனதருட்கணோக்கங்
காட்டிநன்மறையின்வண்ணங் காக்கநின்கடமையென்றே.

என்றிவ்வண்ணமாக எனது குருசுவாமியானவர் தன்னைமால்காட்டிமயக்குகின்றஎமரூபமானஸ்திரீகளின் புண்ணாறு கேணிதவி வாழ்த்திடாமல்தனது குருசுவாமியைப் பார்த்து வேண்டிக்கொள்ள இவ்வேண்டுதலைக்கேட்ட இருடியானவர் திருவாய் திறந்து எனதன்பனே இல்வாழ்விலீடுபட்டு அதனின் பதுன்ப மிவ்வாறெனும் நிதானமறிந்து அதனின்று வெறுத்துப்பா வெளியைத் தேடுபவனெவனோ அவனே தத்துவஞானி யெனப்படுவான் அவ்வாறு இகவாழ்வின் தன்மையின்னதென்பதும் அதன் ருசிகரம் இம்மட்டுள்ள தென்பதையும் அனுபவித்தறியான் பரலோக சாதனங்களுக்குச் சொந்தமுடையானல்லவென்பதைப் பன்னூல்களின் திறமையைஎடுக்

துக்காட்டி. ஒப்பில்லாமணியே புத்திரப் பேறில்லார்க்குப் புத்தெனும் நரகஞ்சம்பவிக்குமென்று தெளிந்த வான்றோர்கள் செப்புவாராதலால் நீயும் உன்னைப் பெற்ற சொந்த நகரணுகியவண் நற்குலத்திலோர் உத்தமமாதை தெரிந்து வேட்டல்புரிந்து மகப்பேறு பெற்று குடிப்பண்பை நன்முறையில் வளரச்செய்துவிட்டு அவத்தைச் சுட்டித்தவத்தை நாடி அவனடி சேர்வாயென்று கட்டளையிட்டு வரிதான விஷயங்களெல்லாமளித்து அம்மாமுனி விடை கொடுத்தகன்றார் இந்நிலைமையி லீஸ்பர அம்ஸதிலகனை அம்முனிவரிடம் சுமார் இரண்டரை வருஷகாலம் சிஷ்ருஷை செய்து சகலதெளிவுமடையப் பெற்றுத் தனது சற்குருசுவாமியிடம் விடையுடன் தென் திசை நோக்கிப் பலபல சிவஸ்தலங்களைக்கண்டு தெரிசித்தும் கோதாவரி கிருஷ்ணை முதலிய நதிகளின் புண்ணியப் புனல்களாடியும் சென்னைப்பட்டணம் வழியாய் மணியாச்சியென்னும் ஜங்ஷன் கடந்து தூத்துக்குடி மார்க்கமாய்க் கப்பல்பிரயாணமாகி இலங்கை மாநகரின் தலைமை நகராகிய கொழும்பு வந்து டிராம்கார் வழியாய் ஒவ்வொரு தெருவின் அதிசயங்களைப் பார்த்துக்கொண்டு திங்களொன்று அங்கு தங்கி சாரம் வாய்ந்த ஆரஞ்சூழ்ந்த சிவனடிபாதம் நோக்கிச் செல்கின்ற மத்தியில் ஓர் எளியோன் தாங்கொணா துன்பமெனுஞ் சாகரத்தில் வீழ்ந்து கரையணுகமாட்டாமல் அனுபவிக்குங்கொடிய சஞ்சலத்தைக்கண்ட எனது குருநாதன் தன்னைப்பெற்றெடுத்த தாயாருக்குத்தான் கொடிய துன்பத்திலாழ்ந்தினது போல விபரங்காட்டி யொருவிகித மெழுதியதனால் தனது தாயார் அனுப்பிய சில பொருளையவ்வெளியோன் கரத்திலீந்து அவனின்னலை நீக்கிவிட்டு இருபத்தெட்டு தினத்திற் கப்பால் சிவனடி பாதஞ்சென்றதாக எழுதப்பட்டிருக்கின்றன. அப்பால் திவ்யர்வான சிவனடி பாதமலை மீதேறிச் சிவ

பிருன் பாதந் தேடிச் சேவைசெய்து பாடிய கவி.

அவனடி காணப் பெற்றே னுறுதல் கொண்டே னாற்றல்
கவனமாம் பரியும் வாசிக் கடைசெலும் விதான மீட்டி
நலவழி திறக்கப்பெற்றே னுயக மணியைக் கண்டேன்
சிவனடி பாதம் வீழ்ந்து தெரிசனங் கண்டப் போழ்தே.

என வணங்கியங்கொரு நாள்தங்கி யதனின்று கரடி புலி முதலிய துஷ்டமிருக சஞ்சாரமாகிய சுமார் நூறுமைல் தூரமுள்ள அனுராஜ புரிக்காட்டின் வழியாய் நாளேந்தாகப் பிரயாணஞ் செய்து கண்டி மார்க்கமாய் வந்தவினை தவிர்க்குங் கந்தப்பன் வாழுங் கதிர்காமஞ் சென்று வடிவேலன் மலரடியைத் தெரிசித்துப் பாடிய கவி

முற்றித் திரண்டுருவ மூறிக் கதிர்காமப்
பற்றறுக்கும் ஞான பரம்பொருளே—கற்றகவிப்
பாழான தந்திரத்தால் பட்டழிந்து போகாம
லாளாயேல் காப்பதினி யார்.

எனப்பணிந்து அவனருள் பெற்று அம்மலைச் சார்பெல்லாஞ் சென்று அங்குள்ள மாலக தீர்த்த மாடி யடுத்தநாள் தலைமன்னார் மார்க்கமாய்த் தனுஷ் கோடி வந்து முத்திபெருஞ் சித்தமுடன் வாரிநீராடி இராமேஸ்பரஞ்சென்று ஸ்ரீ ராமபிரானின் திருக் கோலங்கண்டு தீர்க்கத்தெண்டனிட்டுப் பாடியகவி.

மணிகிடக்கு மாமதில்சூ ழயோத்திநகர் மன்னன்தச
ரதன்வரத்தால் வருந்தியீன்ற
துணிகிடக்குஞ் சிரிருமன் முனிவரத்தால் வில்லிறுத்துச்
சீதைதன்னை மாலைசூட்டி
யணிகிடக்குந் தந்தைபணி யதற்கேக ராவணனு
மரும்விரகி லம்மன்கொள்ளப்
பணிகிடக்கும் வில்வீரன் சென்றவழி யின்றளவுந்
துளபங்கமழ் பதிபெற்றேனே.

எனப்பாடித் திருவருள் பெற்றுத் திரினாள் கடந்து மானாமதுரை மார்க்கமாய் அருப்புக்கோட்டைப் புக்கியவன் மறைவழிபடுத்துத் தவநிலை நிறுத்திக் குணக்கடலாதிய பக்தியிற் சிறந்த வுத்தம புருஷனை

கிய வ. கருப்பண மூப்பனு ரென்பவரைத் தனக்கு அந்தரங்க சீஷனுகக்கொண்டு சிலவரிய விஷயங்களை உபதேசஞ்செய்ததுடன் அந்நகரிலும்அதைச்சேர்ந்த பிறவிடங்களிலு மநேக நண்பர்கள் சுவாமி தெரிசனம் செய்து சுவாமியின் திருவருள் பெறவருபவர்களில் முக்கியஸ்தர்களாயும் த ன து சீடனுகிய வ. கருப்பண மூப்பனுர்க்கும் மேலான விசுவாசமுள்ளவர்களும் நாளதுவரை மறக்காதவர்களுமான சொக்கலிங்க புரம் க ஆறுமுக மூப்பனுரையும் முத்துசாமியாபுரம் க. பு. தவசியானந்த மூப்பனுரையும் இன்னுமுள்ள சிலரையும் த ன க் கு ஆதரவாகக் கொண்டு சுமார்இரண்டு வருஷகாலந்தங்கி யாவருஞ் செயற்கரிய சித்துகளை யாட்டி யாவர்க்கு மாசை தன்னையூட்டி கடைப்பிடி யென்பதைக் கருத்திருத்தாதவர் களான தினுல் யாதொரு முடிவுமடையாத தன்மையிற் தனது சீஷன் முதல் யாவரிடமும்விடை பெற்று ஆரூர்க் கணபதியாலயத்தின் முன்பாலான மண்டபத்தில் எதுமறியாத பித்தர்கள் நிகர்க்க எங் குருபரசிகாமணி தனித்திருக்கும் வேளையில் நானவ் வழியாகப் போய்க்கொண்டிருந்தேன் அவ்வேளையில் பொன்னம்பலவா பொன்னம்பலா வெனப் பெயரிட் டெனை யழைக்கத் தன்னைத்தானே திகைத்து நாலு திசையும் நோக்கச் சுவாமியன்றியல்லாரில்லாததைக் கண்டு யோசனைகொண்டு முன் பின்னறியாத சிறு வனுகவும் சிவவேட மல்லாதவனுகவுந் தோன்று கின்ற யிப்பொடியன் நமது பெயரை எ வ் வா று குறிப்பிட்டானுயினு மருகிலணுகி யறிவோமெனத் தீர்மானித்துப் பக்கம்வந்து வணங்கி நின்றேன் அப் போது சுவாமி திருவாய் மலர்ந்து அம்பலவா இப் போதுவுன்னைத் தெரிந்து கொண்டநான் சின்னு ளுன் கிரஹத்தில் தாமதிக்கவேண்டு மிடந்தருவை யாவென வினவிய சுவாமியை யுடனெனது கிரஹத் துக்கு அழைத்துப்போயன்று முதல் சுவாமிக்குச்

சிஷ்ருஷை செய்யும் பாக்கியம் கிடைத்ததற்காகச் சந்தோஷங்கொண்டேன் இந்த நிலைமையில் சுமார் 2½ வருஷ காலயாக நிமிசமேனுஞ் சுவாமி முகதெரிசனங் கிடைக்காமற் கடந்த நாட்களில்லை யெனும்படி மற்றெல்லாம் மறந்துக்குற்றேவல் புரிந்து வரும நாளில் அரிதான வித்தைகளை யெனக்கு ஊட்டியும நல்வழியிற் கூட்டியும் விட்ட எனது ஞானத்தந்தையை என்கனவிலும் நினைவிலுமறவேன் தனது குருநாதன் தனக்கிட்ட கட்டளையை நிறைவேற்றும் எண்ணமே சதாவுங்கொண்டு நாளெண்ணியிருக்கும் எனது குருநாதன் எனையழைத்து அன்பா நான் சில ஸ்தலங்கள் சென்று தீர்த்தமாடுங்குறையொன்றிருப்பதால் நான்சென்று சிலநாள் கடந்து திரும்புகிறேனென்றுரைக்க அவ்வசனத்தை கேட்டவுடன் அழற்கோல்கொண்டு கண்ணத்திலணைத்தாற்போலப் பரிதாபங்கொண்டு ஐயனே அரைக்கணமேனும் விலகாமலருகிருந்து சிஷ்ருஷை செய்த அடியேன் சுவாமியிவண் எழுந்தருளுமட்டும் ஆருக்கினி யென் ஏவல் புரிகிறதென்றும் ஆளிங்கத்தாளை யினி யென்று காண்பதென்னு மேக்கமே ஏக்கமதாய்க் கண்பனி துளிக்கச்சுவாமி எனது செயலையுணர்ந்து நண்பா நான்போகிறதினால் யாதொரு கவலையடைய வேண்டாம் உனக்கு இன்னல் வருங்காலம் எனக்குத்தெரிவதுடன் அன்று நினைக்க வுன்னருகிருந்து வினைதவிர்ப்பேன் மாகையாலிதற்கு அறிகுறியாக எனது கைப்பட எழுதிய காப்பியத்தை உனக்குக் தருகிறேன் அதன் பெருமை யாதெனிலதை யன்போடு நேசிக்கத் துன்பம் விலகும் மானிடர்க்கு வேண்டிய யிகபரசாதனங்களிதனாலடைவதுந் தவிர நானிவண் திரும்புவதற்கு மிதுலக்காகுமென்று என்னுடைய மனதைத் தேற்றித்தான் குறித்த எல்லை நோக்கிநடந்தார் இவ்விதமாக எனது குருசுவாமி எனது மனதைக்கவர்ந்து சென்ற பின்னுள்ள விஷ

யங்களைப் பிறரால் தெரிந்து கொண்டமட்டிலும் எழுதி வருகிறேன் அப்பால் ஆரூர் விட்டு திருச் செந்தூர் சென்று குகசேவைசெய்து செந்தூர் மாலை யென வொன்று பாடியதாகவும் அதனைக் கண்ணு றும் பாக்கியம் பெறாததற்காகவும் கவல்கின்றேன் அன்றியும் கன்னியா குமரி சென்று சத்தியாகிய வுத் தமிபாதம் சிரமேற்கொண்டு தேவி திருவருட் பெற் றுத் திருங்கரன்குடி மார்க்கமாய் குற்றாலம் நாடி வனமார்க்கம் தேடி வழிகூடிப் போகுமிடையில் தனது தந்தையுடன் பிறந்த தங்கைகண்டு சுவாமி யை விடாது தனது கிராமத்துக்கு அழைத்துப் போய்ச் சின்னாளங்கு வைத்திருந்து சுவாமியெனு முதலையின் முதிர்ந்த வளைபோன்ற அகடையுடைய அன்னைக்குத் தெரியப்படுத்தி யதனை யவ்வம்மையார் தந்து புத்திரனைக்காண வேண்டு மெனவு மவா வால் விஜயஞ்செய்த சுவாமியி னிருப்பிடஞ்சென்று முத்துப்போன்ற கண்ணீர் சொரிந்து அகப்பற்று டன் கட்டியணைத்து அப்பனை பன்னிரண்டு வருட மாக அன்றமைத்தவிதியால் அநுவனஞ் சென்றாய் அரன் அருளிய கடாட்சத்தால் அரவிந்தவதனத் தைக் காணப்பெற்றே னென்னும் பலவித உருக்கச் சொற்களைப் பொழிந்து சுவாமியி னெண்ணத்தை மாற்றியத்தாயுடன் தனதகத்துக்கு வந்து சுமார் பன்னிரண்டு வருடங் களுக்குப்பின் எமரூபமான தனது தந்தையின் வதனத்தைத் தெரிசனஞ்செய் தார் அக்காலையில் தனது புத்திரனின் முகத்தை எடுத்து நோக்காமல் அம்பனைய கடுஞ் சொற்களை ஆயிரமாயிரஞ் சிந்தியதைக்கண்ட தனது தந்தை யுடன் பிறந்த கனிஷ்டரான K. இராமசாமி நாடார் சுவாமிக்குப் பின்னமாகச்சிதறிய மனதைத்தேற்றி யன்னவர் ஆதரவில் அவ்வூர் தங்கி அருள் நிறைந்த குருநாதனின் கட்டளைக்குட் பட்டவராய்ப் புறப் பற்றில் உலகத்துடனொத்தும் அகப்பற்றினில் புனி

யம்பழத்தை நிகர்த்தும் அகில வாழ்விற்குரிய ஒரு
மண மாதைத்தேடி இல்வாழ்வை நடத்தும்பொருட்
டான உலக நடனங்களாடி வருங்காலத்தில் எனது
குருநாதன் பொன்னிரத்தம்மன்மாலை சுப்பிரமணியர்
மாலை பத்திரகாளியம்மன் பதிகம் உடற்கூறு ஆனந்
தக்கழிப்பு மாயவரம் தனியூர் சாந்தகுணானந்த
சபையைப்பற்றிய அருமை வாய்ந்த ஞானம்நிறைந்த
குணமாலிகா வென்னும் பெயரிய நாவல் சித்திர
விவேகம் செந்தமிழ்க்கருத்து சித்திரகுப்தர்புராணம்
நந்நகர் வெண்பா கலியுகவினோத புராணம் தோரண
மலைப்பதிகம் என்னுமரிய பெரிய நூல்களை இயற்றி
க்கருணை நிறைந்த பரமபுருடன் தனக்குக் கொடுத்
திருக்கிற வாணாளை வீணாளாக்காமல் சிவப்பொழு
தாகக் கடத்திவரும்நாளில் தனது குருநாதன் கட்
டளையை நிறைவேற்றும் பொருட்டாய் இகவாழ்வின்
சாதனங்களுக்குரிய ஓர் மாதைத்தனது சொந்த நக
ரிலேயே தேடினதாகவும் அம்மாதின் மரபார் அக
திக்குப்பெண் கொடுக்கலாகா தெனத்தடுத்து விட்ட
தாகவும் அதற்கு அறிகுறியாகவும் பாடியகவி.

இன்னமெம தூரி லெத்தனையோ பெண்கொளலாம்
வன்னக்க லாபமயில் மாதரசே—சின்னவினைச்
செம்மானே யாயிடினுஞ் சேரப் பொருளிருந்தா
லம்மானே யாகிடுவோ மறி.

எனப்பாடி யீஸ்பரதியானஞ் செய்து கொண்டி
ருக்கும் நாளில் தனது தந்தையுடன் பிறந்த தங்கை
யீன்ற அருந்ததிபோன்ற கற்புநிறைந்த உத்தமி
யாகிய திருமலையாண்டவரையே குலதெய்வமாகக்
கொண்ட பக்தியிற் சிறந்த மாது சிரோன்மணியாகிய
திருமலை வடிவம்மாளைப் பாணிக் கிரகணஞ்செய்து
இல்வாழ்விற் பொருந்தி யிருவரு மீஸ்பர பக்தி வளர்
த்து வருங்காலத்தில் அருப்புக்கோட்டையில் தனது
சிடனைக்கண்ணுறச் சென்று அவணுள்ள பரிம்பா
லம்மன் வறந்தறவேண்டியோர் பதிகம் பாடிச்சில

நாளங்கு தங்கிப்பின் விடையுடன் ஆ... வந்து எனக்குரிய குறைகளை நிவிர்த்திசெய்துவிட்டு வருவதாய்ப் புகன்று தனதகம் சென்று சத்தியத்தை யே வரம்பாகக்கட்டி வளர்த்துவரும் ரெயில்வே கண்டிராக்டராயும் கடையமாநகர் வாசியுமான M. வெங்கிடாசலம்பிள்ளை யென்பவர்களையு மிராணையு நண்பாகக்கூட்டி சிலவரிய சித்துகளையுங் காட்டிச் சகல பிணிகளையும் வாட்டி நற்பொழுதை யோட்டி வருங்காலத்தில் கிடைப்பதற்கரிதாகிய மாணிக்க மணிய வோர் புத்திரனை யீன்று அருமையுடன் வளர்த்து வருநாளி லம்மைந்தனுக்குச் சகல வித்தைகளையு மூட்டிபபதியும் பரவாழ்வின் பயனுமுறைத்து ஜெகநாத ஸ்தலமென பதைக்குறிக்கும் பொருட்டாக ஜெகநாதனென நாமசரணமிட்டு நல்லொழுக்க விதிகளில் வளர்த்து வரப்படுகின்றன அளவிடற்கரிதான சூட்சமுடைய இருதயம் விளங்கிய எனது குருநாதனிடத்தில் பிள்ளைமாநகர் முத்துக்கருப்பன் பண்டிதர் குமாரன் கந்தன்பண்டிதனும் தென்காசித்தாலுகா கிருஷ்ணபுரங்கிராமம் பலசரக்கு மளிகை மூ. செல்லையாக்கரையாளரும் உபதேசம் பெற்றுச் சுவாமி மனமிணங்கச் சிஷ்ருஷை செய்து வருகிறதாகத்தெரிகிறது அன்றியும் அவ்வூர் முப்பிடாரியம்மன் பேரில் ஒருபதிகமும் பாடியிருப்பதுடன் சுவாமி பிரயாணங்களில் நடந்ததைப்பற்றித் தனிப்பாடலெனும் பெயருடன் பாடியிருப்பதுவைப் பார்வையிட்டேன் அவை அரிய விஷயங்க ளுளதாயினு மிங்ஙன் சிலபாக்களை எழுதுகிறேன்.

அவையாவன.

1. பிறரால் துயர் நேரிட்டகாலத்தில் பாடியதில்

சொன்னாலுஞ் செங்கையதாற் தொட்டாலு நாவினிக்கு
மென்னளுஞ் சீனி யெனக்கின்ன—வின்னிலத்தி
லாரா ருளத்துதிக்கி லதுதானே வவ்வவரை
நீருக்கும் வன்னியதாய் நின்று.

### 2. மால்காட்டிய ஓர் மாதைப்பற்றி.

எடுத்துப் பிடித்தழுவா ரிருகக் கட்டியுயிர்
கொடுத்திடு வேனெனக் கூறிடுவார்—அடுத்தடுத்துக்
கொஞ்சிச் சிறுநகையால் கொட்டித் தினமயக்கும்
வஞ்சிய ராசைதனை மற.

### 3. ஜாதியைப்பற்றி

ஜாதிதனிற் பெரியோன் றானெனுமோ ராணவத்தா
லாதிப் பிறப்பீதெவ்வா றாகியது—பேதைகொண்டு
யான்பெரியோன் யான்பெரியோ னென்றெழுந்த
கூன்பெரிய குரங்கேநீ கூறு. வானீண்ட

### 4. கொடியபசிப் பிணியால் வருந்துஞ் சமையம் அன்னமிட்டு உபசரித்ததைப் பற்றிப் பாடியது.

ஆயாசந் தான்தீர்த்து வடிவருடி யன்புடனே
பாயாசந் தந்தென் பசிதீர்த்தாள்—வேயிசையே
மள்ளருழு மிடத்தில் மலிந்தமணிக் கொழிப்
பிள்ளைமா நகர்வாழ் பேதை.

### 5. தான் நினைத்தகாரியத்துக்கு இடைஞ்சல் வந்ததைக் கண்டு பாடியது.

என்னாலிங் காவதொன்று மில்லையெம் மாயவனே
யுன்னாலிங் காவதென வோர்ந்தேன் இந்நிலத்தில்
நாமொன்று நினைத்திருக்க நால்வேதந் தேடுமரன்
தாமொன்று நடத்திடுவ தாலே.

### 6. கடவுள் இல்லையென்று மறுத்த ஒருவனைக் குறித்து மறுநாளவனுக்கு வரப்பட்ட துன்பத்தைக்குறித்துக் காட்டிப்பாடியது,

பேச்சேன் பெருமூச்சேன் பித்தர்தமைப் போலேகை
வீச்சேன் வெறும்பிலுக்கேன் மேதினியில்—லாச்சுதடா
ஈமமது காட்டிட யிருண்டவலை கைகொண்டு
எமன்வரு வேளையிது வே.

### 7. கணேசப்பெருமான் சேவை செய்ய ஆனிமாதஞ் செல்லு மிடையிலுள்ள துன்பத்தைக் குறித்துப் பாடியது.

ஆனித் திருநாளி லைங்கரனுர் சேவைசெய்யக்
காணிற் கடுகநடையாற் காவெனுர்தேன்—மானிலத்தில்
வேனிலா னெய்யுகின்ற மெய்யம் பதனுள்ளாகிச்
சீனிபடுச் துயரந் தீர்

8. சிவகந்திபுரத்திலிருந்து சிவகாமி புரத்துக்கு போகுமிடையில் சூரிய வெப்பங் காங்காமற்பாடியது

சிவகந்தி புரனீங்கிச் சிவகாமிப் புரஞ்சேருங்
கவலையிற னடக்கதல்லை காணுமட்டும்—பவனுசா
வீரியமாய்த் தாவெழுந்து விரிந்து மலிந்தவருஞ்
சூரியனுர் வெங்கதிர்ச் சோம்ப

என்னும் பாடல்களுக்கு எண்ணிக்கையில்லை அவைகளையெல்லாமொருங்கே சேர்த்திரட்டிப் பிரசுரஞ்செய்யச் சித்தமாயிருக்கிறேன் இந்நிலைமையில் தனது வித்தைகளைக் கமடம் போலடக்கிய எனது குருநாதனின்னரியசெயல்களை நினைக்க நினைக்க ஆச்சரியத்தையே கொடுக்கின்றது கவி.

திருவளருமெனதுகுருசீனிவெனுமுனிமையொரு
தினமேனுஞ்சவைதெய்தார்
திகழுமறையிறதிவழியொருகணமுர்சுவரு
திறமைபெருஞ்சுரர்களுட்டில்
அருமையுடனினைத்துவையளித்தருளுர்தருக்களடி
யமர்ந்தவரியணையின்மீது
வரியமறைமுனிவருடன்சகலகலையாசிரு
மதிரவிருந்தாகபூண்டு
ஒருவனெனவ்டைபவனிவருவனமர்கைலைச
ருரிமைமுழுதருளப்பெற்று
வுலகமதிலிருவிதியுங்குலமதுவுமால்போலா
யோக்கியவர்வீங்கிவாழ்வார்
சிரியகுறனாகவெலியாசனதுவுலகைபொரு
சிற்றடியாவளர்தமெதன்னைச்
சிறுவனெனையாண்டகுழுதெய்வமணிகாக்குமணிச்
செய்யுமருள்பெய்யுமணியே.

எனது குருநாதனின் சமாதியைய வளம்பொருந்திய அருப்புக்கோட்டை யென்னுமாநரி லமைப்பதாகச் சுவாமியாலெனக் குறிக்கப்பட்ட நோட்

டில் 23ம் பக்கம் 16வது வரிமுதல் எழுதப்பட்டிருக்கின்றன வன்றியுமவையிலுள்ளதுவையே விஸ்தரிக்கப்பட்டிருக்கிறதன்றி யொன்றேனும் அனுவசியமாகக்கூட்டப்படவில்லை யென்பது யுறுதியாகச் சொல்கிறேன். மேலும் எனது சிற்றறிவுக்கெட்டிய மட்டும் தெரிந்ததும் கேள்விப்பட்டதுமான விஷயங்களை எழுதிவருகிறேன் இதைக்கண்ணுறும் புண்ணியவான்கள் இதில் ஏதேனும் கூட்டப்பட்டிருந்தாலும் அல்லது அறியாமல் குறைபட்டிருந்தாலும் எனது குருசுவாமியின் சிஷர்களானவர்களில் யாருககேனும் கிரமத்தையெண்ணாது லட்டர் மூலமாய விபரப் தெரிவிப்பார்களாகில் அவர்கள் கிரமபரிகாரத்துக்குச் சம்பந்தப்படுவதுடன் எனக்குப் பெற்றோர்களாயவுற்ற துணையாமெனப் பன்முறையும் வணக்கஞ் செய்கின்றேன் குறைவுகளையெல்லாம் நிறைவுபடுத்திக் கூடியசீக்கிரம் மேலுள்ள அரிய விஷயங்களை பிரசுரஞ் செய்யத்தயாராக இருக்கிறேன் குருநாதன் துணையுண்டாக.

சுபம்! சுபம்!! சுபம்!!!